THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Friday, the 28th August 1970.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, the Deputy Chairman (THIRU. G. KRISHNAMOORTHY) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

DEPUTY CHAIRMAN : Question No. 34.

Extension areas of Periar Dam

*34. *Q.* THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether it is a fact that water has not been supplied for the last three Faslis to the extension areas of Periar Dam in Sivagangai and Thirupathur Taluks ; and

(*b*) if so, whether there is any proposal to refund the water-cess collected during the last three Faslis ?

பெரியார் அணை விஸ்தரிப்பு

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சிவகங்கை, திருப்பத்தூர் வட்டங்களில் உள்ள பெரியார் அணை விஸ்தரிப்பு பகுதிகளுக்கு கடந்த 3 பசலியாக தண்ணீர் விடவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், 3 பசலிக்கு வசூலித்த தண்ணீர் தீர்வையைத் திருப்பிக் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) பெரியார் அணை விஸ்தரிப்பு திட்டத்திலிருந்து பருவமழை பொய்த்த காரணத்தால் திருப்பத்தூர் வட்டத்தில் 1378 பசலியிலும், சிவகங்கை வட்டத்தில் 1377, 1378, 1379-ம் பசலிகளிலும் மேற்படி திட்டத்திலிருந்து போதுமான அளவு தண்ணீர் விடப்படவில்லை.

(இ) திருப்பத்தூர் வட்டத்தில் பசலி 1378-க்கு ரூ. 1706.56 வரி வஜா செய்யப்பட்டுள்ளது. அதேபோல் சிவகங்கை வட்டத்தில் 1377-ம் பசலியில் ரூ. 9,346-ம், 1378-ம் பசலியில் ரூ. 15,097.49-ம், 1379-ம் பசலியில் ரூ. 20,229.73-ம் வரி வஜா செய்யப்பட்டுள்ளது.

[28th August 1970

திரு. பி. திருஞானசம்பந்தம்: துணைத்தலைவர் அவர்களே, சிவகங்கை தாலுகா பகுதியில் கடந்த மூன்று நான்கு வருடங்களாகத் தண்ணீர் விடவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன் : நான் அதைத்தான் சொன்னேன். தண்ணீர் விடப்படவில்லை என்று சொன்னேன். பல இடங்களில் அதற்கான வரி வஜா செய்யப்பட்டிருக்கிறது. சில இடங்களில் தவறுதலாக யாராவது வரி கட்டியிருப்பார்களானால், வரி வஜா என்று அனுமதிக்கப்பட்டிருக்கிற இடங்களில் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

Separate Flag for the State

*1.S.N.*Q.* THIRU D. SANTOSHAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to have a separate flag for the State ;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the details of the flag ?

மாநிலத்திற்குத் தனிக் கொடி

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இம் மாநிலத்திற்காகத் தனிப்பட்டதொரு கொடியை வைத்துக் கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) அக்கொடி பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு மாநிலத்திற்கு என்று தனியாக கொடி ஒன்றினை ஏற்படுத்தி, அதனை மாநில முதலமைச்சர் மற்றுமுள்ள அமைச்சர்களின் கார்களிலும், வீடுகளிலும் மாநில அளவில் பறக்க விடுவதற்கு இம்மாநிலத்திற்கு தனிக்கொடி வேண்டும் என்று கருதப்பட்டது.

(உ) தமிழ் நாட்டுக்கென்று கோரப்பட்டுள்ள கொடியில் தமிழ் நாட்டின் சின்னமாகிய கோபுரம் ஒரு பகுதியிலும் தேசீயக்கொடி ஒரு பகுதியிலும் இருக்கும்.

THIRU D. SANTOSHAM : Mr. Deputy Chairman, Sir, there is no doubt that such a flag is really necessary for our State and, in fact, such a flag ought to have been designed even when the State Emblem was designed or at least when the National Flag was designed. But, inasmuch as it was not done then, was there any special occasion or necessity felt just now to think of this flag ? If so, can the House be taken into confidence and the reasons therefor given ?